TNTT070000572016

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கோவில்பட்டி

முன்னிலை : திரு. K. ஆனந்த், பி.ஏ., எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, கோவில்பட்டி

2026 வது வருடம் அக்டோபர் திங்கள் 13–ம் நாள் வியாழக்கிழமை

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் : 29 / 2016

CNR.No.TNTT07-000057-2016

வ. எண்		**விபரங்கள்**
1	புகார்தாரர்	இயக்குநர், ESIC நிறுவனம், திருநெல்வேலி. அதன் கோவில்பட்டி ESIC கிளை அலுவலக மேலாளர் மூலமாக.
	எதிரியின் விபரங்கள்	
2	பெயர்	P. மனோகரன்
3	தந்தை பெயர்/ கணவர் பெயர்	S. பழனிச்சாமி
4	வேலை	–
5	முகவரி	கதவு எண்.1D, வடக்கு புதுகிராமம், கோவில்பட்டி.
6	வயது	30/2015
	தேதி	
7	சம்பவம்	01.09.2012 முதல் 30.09.2013 வரை
8	புகார்	31.12.2025

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:42:30 +0530

9	எதிரிகளின் கைது விபரம்	எதிரி கைது செய்யப்படவில்லை.
10	பிணை விபரம்	–
11	வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி	08.05.2026
12	வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி	12.08.2026
13	தீர்ப்புரை	புகார்தாரர் தரப்பில் எதிரி மீது ESI Act பிரிவுகள் 85(i)(a) r/w 85(a) படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி என குவிமுச பிரிவு 248(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.
14	தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம்	எதிரிக்கு தீர்ப்பு நகல் இலவசமாக வழங்கப்பட்டது.
15	காலதாமதத்திற்கான விளக்கம்	சாட்சிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்வதினாலும், எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்ததாலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கு 18.01.2016 அன்று இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1, கோவில்பட்டி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. மோகன்தாஸ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளுக்கு கேட்பு நல்கியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 12.08.2026 அன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்த போது இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

தீர்ப்புரை

எதிரி மீது திருநெல்வேலி ESIC நிறுவன இயக்குநர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் சுருக்கம் :

1) எதிரி கோவில்பட்டி 1வது தெரு, வடக்கு புதுகிராமம், எண்.103, M/S. Mr. சாந்தி கார்மெண்ட்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். எதிரியின் மேற்படி

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:42:35 +0530

தொழிற்சாலைக்கு குறியீட்டு எண்.66-00-041120-000-0199 என்ற எண் வழங்கப்பட்டுள்ளது. எதிரி மேற்படி தொழிற் நிறுவனத்தின் முதன்மை வேலை வழங்குபவராக இருந்து கொண்டு மேற்படி தொழிற் நிறுவனத்தின் அன்றாட வேலைகளை நடத்தி வந்துள்ளார். மேற்படி நிறுவனம் பிரிவு 2(12) of ESI Act க்கு உட்பட்டது. பிரிவு 40 of ESI Act படி எதிரி அவரது தொழிற் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அனைத்து பணியாளர்களுக்கும், பணியாளர்கள் மற்றும் உரிமையாளர் ESI பங்களிப்பு தொகையை விதிமுறைகள் 31ன் படி குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டும். மேற்படி விதிமுறைகள் 31ன் படி உரிமையாளர் மற்றும் பணியாளர்களின் 01.09.2012 முதல் 30.09.2013 வரையிலான ESI பங்களிப்பு தொகையான ரூ.69,712/- யை சம்பள காலத்தில் இருந்து 21 நாட்களுக்குள் எதிரி செலுத்தவில்லை. எனவே புகார்தாரர், எதிரி மீது பிரிவுகள் 85(i)(b) r/w 85(a) & 85C of ESI Act படி தனிப்புகார் தாக்கல் செய்துள்ளார்.

2) இந்நீதிமன்ற விசாரணைக்கு முன்னிலையான எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 207ன் படி எதிரிக்கு 08.05.2026 அன்று இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, எதிரியிடம் புகார் மனுவில் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து 21.05.2026 அன்று கேள்வி கேட்ட போது எதிரி பொய் வழக்கு என்று மறுத்துள்ளார். பின்பு குவிமுச பிரிவு 244-ன் படி ESIC கோவில்பட்டி அலுவலக மேலாளர் அசா.1ன் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு அசா.ஆ1 முதல் அசா.ஆ.10 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டன. பின்பு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது ESI Act பிரிவுகள் 85(i)(a) r/w 85(a), 85(i)(b) r/w 85(a) படியான குற்றச்சாட்டுகளுக்கு முதல் நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் கடந்த 23.07.2026 அன்று எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைந்து கு.வி.மு.ச பிரிவு 246(2) ன் கீழ் வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்று கூறிக்கொண்டார்.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.13 22:42:40 +0530

3) எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துவிட்ட படியால் மேற்படி பிரிவுகளின் கீழ் அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் 16.07.2026 அன்று ஏற்கனவே அ.சா.1 விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டதை ஏற்றுக் கொள்வதாக புகார்தாரர் தரப்பில் 06.08.2026 அன்று தாக்கல் செய்த குறிப்பாணையை இந்நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பில் சாட்சிகள் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

அரசு தரப்பு சாட்சிகளிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :

4) அசா.1 கோமதி செல்வ சீனிவாசன் தற்போது கோவில்பட்டி ESI அலுவலகத்தில் கிளை மேலாளராக உள்ளார். கடந்த 08.01.2013 அன்று புகார்தாரரின் ESI கழகத்தின் Social Security Officer சுஜித்குமார் பிரதான் என்பவர் எண்.103, வடக்கு புதுகிராமம், முதல் தெரு, கோவில்பட்டியில் அமைந்துள்ள M/r. Shanthi Garments என்ற நிறுவனத்தில் 2011–2012 வரையிலான வருகை பதிவேட்டை ஆய்வு செய்வதற்காக சென்ற போது அங்கு செப்டம்பர் 2012 முதல் 10 தொழிலாளர்களுக்கு மேல் பணி செய்வதாக கண்டுபிடித்துள்ளார். அவரது அறிக்கையின் பேரில் 2012 செப்டம்பர் முதல் ESI பணம் கட்ட வேண்டும் என்று சாந்தி கார்மெண்ட்ஸ்ன் உரிமையாளரான எதிரிக்கு ESI எண் வழங்கப்பட்டுள்ளது. எதிரி செப்டம்பர் 2012 – செப்டம்பர் 2013 வரை ESI பணம் ரூ.69,712/– கட்டவில்லை என்பதால் எதிரிக்கு C 18 – Adhoc அறிவிப்பு 23.10.2013 ல் வழங்கப்பட்டுள்ளது. அதில் 15.11.2013 ல் காலை 10.00 மணிக்கு எதிரி திருநெல்வேலி ESI அலுவலகத்தில் ஆஜராகி அவரது தரப்பு விளக்கத்தை தெரிவிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

5) பின்பு எதிரி மேற்படி அலுவலகத்தில் ஆஜராகவில்லை என்பதால் 30.09.2014 அன்று மீண்டும் ஒரு வாய்ப்பாக 20.10.2014 அன்று காலை 10.00 மணிக்கு ஆஜராக வேண்டுமென அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு அறிவிப்புகளையும்,

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:42:46 +0530

அதனுடன் இணைந்த விளக்கம் கோரும் அறிவிப்பும் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்புகளை பெற்றுக் கொண்ட எதிரி ESI நிறுவனத்தில் ஆஜராகவில்லை என்பதால் எதிரிக்கு அசா.ஆ.9 45A உத்தரவு 14.07.2015 அன்று அனுப்பப்பட்டுள்ளது. பின்பும் எதிரி பணம் செலுத்தவில்லை என்பதால் எதிரி மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி இன்று வரை ESI பணத்தை செலுத்தாமல் இருந்து வருகிறார். 26.07.1991 ஆம் தேதியிட்ட ESIC தீர்மானத்தின் சான்றிட்ட நகல் அசா.ஆ.1 ஆகும். 08.01.2013 ஆம் தேதியிட்ட படிவம் சி 10 அ.சா.ஆ.2 ஆகும். 08.01.2013 ஆம் தேதியிட்ட Visit notice அசா.ஆ.3 ஆகும். படிவம் 1 அசா.ஆ.4 ஆகும். 25.04.2013 ஆம் தேதியிட்ட M/S. M.r சாந்தி கார்மெண்ட்க்கு அனுப்பப்பட்ட படிவம் சி 11 அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை அசா.ஆ.5 ஆகும். 23.10.2013 ஆம் தேதியிட்ட M/S. M.r. சாந்தி கார்மெண்ட்க்கு அனுப்பப்பட்ட படிவம் C 18 Adhoc அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை அசா.ஆ.6 ஆகும். 23.10.2013 ஆம் தேதியிட்ட M/s. M.r. சாந்தி கார்மெண்ட்க்கு அனுப்பப்பட்ட Show cause அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை அசா.ஆ.7 ஆகும். 30.09.2014 ஆம் தேதியிட்ட M/s. M.r. சாந்தி கார்மெண்ட்க்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை அசா.ஆ.8 ஆகும். 03.08.2015 ஆம் தேதியிட்ட ESI சட்டம் பிரிவு 85(a) கீழான வழக்கு தாக்கல் செய்வதற்கான அனுமதி உத்தரவு அசா.ஆ.10 ஆகும். எதிரி மீது இந்த புகார் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) புகார்தாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக அமைந்த புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை தொகுத்து கடந்த 07.08.2026 அன்று கு.வி.மு.ச.313(1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி தான் குற்றவாளி அல்ல என்று மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.13 22:42:52 +0530

பிரச்சினையும், தீர்வும் :

7) புகார்தாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு வழக்கறிஞர் ESI உரிமையாளர் மற்றும் பணியாளர்களின் பங்களிப்பு தொகையை ESI விதி 31ன் படி குறிப்பிட்ட காலத்திற்குள் எதிரி செலுத்தவில்லை என்றும், அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட மேற்படி குற்றச்சாட்டுகள் புகார்தாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் வழியாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால் மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்று புகார்மனு மற்றும் அசா.1 ன் சாட்சியத்தின் அடிப்படையில் வாதுரை எடுத்துரைத்துள்ளார்.

8) எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி மீது புகார்தாரர் தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரி தனியாக டெய்லர் கடை வைத்து அவர் மட்டும் அதில் பணிபுரிந்து நடத்தி வருவதாகவும், அசா.ஆ.5 முதல் அசா.ஆ.9 வரையிலான ஆவணங்களில் வேறு நபர்கள் கையொப்பம் செய்துள்ளாகவும், எதிரி மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் இல்லை என்றும், எதிரி தான் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் அறிவிப்புகள் எதுவும் எதிரிக்கு முறையாக சார்வு செய்யப்படவில்லை என்றும், மேற்படி நிறுவனத்தில் 10 பணியாளர்கள் பணியாற்றவில்லை என்று அசா.ஆ.3 ல் குறிப்பிடப்படவில்லை என்பதால் ESI சட்டம் இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றும், அசா.ஆ.4 எதிரியால் வழங்கப்பட்டது இல்லை என்றும், மேற்படி நிறுவனம் இந்த வழக்கில் ஒரு எதிரியாக புகார் மனுவில் தலைப்பில் சேர்க்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று எதிர்வாதம் எடுத்துரைத்துள்ளார்.

9) எதிரி, மேற்படி அவரது நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு உண்டான அவரது பங்களிப்பு மற்றும் தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:42:58 +0530

பங்களிப்பு ESI தொகையை ESI கழகத்திற்கு செலுத்தாமல் இருந்தார் என்பது புகார்தாரர் வழக்காகும்.

10) அசா.1ன் சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்ததில், கடந்த 08.01.2013 அன்று ESI கழகத்தின் Social Security Officer சுஜித்குமார் பிரதான் என்பவர் கோவில்பட்டி, முதல் தெரு, வடக்கு புதுகிராமம், எண்.103, M/R. Shanthi garments, என்ற எதிரியின் நிறுவனத்திற்கு மேற்படி நிறுவனத்தின் 2011-2012 வரையிலான வருகை பதிவேட்டை ஆய்வு செய்வதற்கு சென்ற போது, அங்கு 2012 முதல் 10 தொழிலாளர்களுக்கு மேல் பணி செய்து வந்துள்ள நிலையில், அவர்களின் ESI பணமான ரூ.69,712/-த்தை எதிரி செலுத்தவில்லை என்பதால் எதிரிக்கு ESI எண் வழங்கப்பட்டதாகவும், பின்பு எதிரிக்கு C 18 - Adhoc அறிவிப்பு வழங்கப்பட்டு 15.11.2013 அன்று காலை 10.00 மணிக்கு திருநெல்வேலி ESI அலுவலகத்தில் எதிரி ஆஜராகி அவரது தரப்பு விளக்கத்தை தெரிவிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் பிறகும் எதிரி ஆஜராகததால் மீண்டும் ஒரு வாய்ப்பாக மேற்படி அலுவலகத்தில் ஆஜராக இரண்டு அறிவிப்புகளையும், அதனுடன் இணைந்த விளக்கம் கோரும் அறிவிப்பும் அனுப்பப்பட்டதை எதிரி பெற்றுக் கொண்டு ஆஜராகவில்லை என்பதால், எதிரிக்கு 45A உத்தரவு அனுப்பப்பட்டதாகவும், தற்போது வரை எதிரி மேற்படி ESI அலுவலகத்தில் ஆஜராகி ESI பணத்தை செலுத்தவில்லை என்பதால் எதிரி மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில் தனிப்புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ள விவரங்களை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்.

11) மேற்படி நிறுவனத்தில் 10 நபர்கள் வேலை பார்ப்பதால் எதிரி அசா.ஆ.4 மனுவை பதிவு செய்ய ESI நிறுவனத்தில் கொடுத்துள்ளார். மேலும், அசா.ஆ.3ல் வருகை பதிவேட்டின் படி ஊழியர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளதால் அதை வைத்து மட்டும் 10 தொழிலாளர்கள் வேலை பார்க்கவில்லை என்று முடிவு செய்ய முடியாது. அசா.ஆ.4ல் 10 தொழிலாளர்கள் வேலை பார்ப்பதாக எதிரி ஒப்புக் கொண்டு அவரது

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:05 +0530

நிறுவனத்தை பதிவு செய்ய மனு தாக்கல் செய்துள்ளதால் அசா.ஆ.3ன் படி மேற்படி நிறுவனத்தில் 10க்கும் குறைவான தொழிலாளர்கள் வேலை பார்ப்பதால் ESI சட்டம் எதிரிக்கு பொருந்தாது என்ற எதிரியின் எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை.

12) அசா.ஆ.1யை பார்வையிடும் போது ESI, திருநெல்வேலி இயக்குனருக்கு இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு அதிகாரம் உள்ளது என்பது வெளிப்படுகிறது. அசா.ஆ.2ல் மேற்படி சாந்தி கார்மெண்ட்ஸ் உரிமையாளர் எதிரி தான் என்று ESI சட்டப்படி குறியீட்டு எண் கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அசா.ஆ.3யை பார்வையிடும் போது எதிரி தான் மேற்படி சாந்தி கார்மெண்ட்ஸின் உரிமையாளர் என்றும், எதிரியின் மேற்படி நிறுவனத்தில் வேலை பார்த்த நபர்களின் எண்ணிக்கைகளை வருகைப் பதிவேட்டின் படி குறிப்பிட்டுள்ளதையும், அதன் அடிப்பகுதியில் எதிரி உரிமையாளர் என்ற முறையில் கையொப்பமிட்டுள்ளதும் வெளிப்படுகிறது. அசா.ஆ.4யை பார்வையிடும்போது எதிரி தான் மேற்படி சாந்தி கார்மெண்ட்ஸ் நிறுவனத்தின் ஒரே உரிமையாளர் என்பதும், மேற்படி நிறுவனத்தில் வேலை பார்த்த ஊழியர்களின் எண்ணிக்கையும், சம்பளமும் குறிப்பிடப்பட்டுள்ளது வெளிப்படுகிறது. மேலும் அசா.ஆ.5 முதல் அசா.ஆ.9ன் படி ESI சட்டப்படி முறையாக எதிரிக்கு ESI பங்களிப்பு தொகை செலுத்தாதது சம்பந்தமாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதற்கான ஒப்புதல் அட்டைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது வெளிப்படுகிறது. மேற்படி ESI அறிவிப்புகளுக்கு பதில் அறிவிப்பு அனுப்பியதாக எந்த ஆவணமும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி அறிவிப்புகள் எதிரிக்கு சார்பு செய்யவில்லை என்ற எதிரியின் எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை. மேற்படி அறிவிப்புகள் உண்மையிலேயே எதிரியின் முகவரிக்கு அனுப்பப்படவில்லை என்றால் அந்த முகவரியில் எதிரி வசிக்கவில்லை என்றோ, தவறான முகவரி என்றோ அந்த அறிவிப்புகள் திருப்பப்பட்டிருக்கும். மேலும் அந்த அறிவிப்புகள் எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதாக ஒப்புதல் அட்டை திருப்பப்பட்டுள்ளது. பொதுவாக அஞ்சலக ஒப்புதல் அட்டைகளில் வீட்டில் இருக்கும் நபர்கள் கையொப்பம் செய்யலாம் என்று நிலையில் அந்த ஒப்புதல் அட்டைகளில் எதிரியின் கையொப்பம் இல்லை என்பதை வைத்து மட்டும் மேற்படி அறிவிப்புகள் எதிரிக்கு சார்வு செய்யப்படவில்லை என்று தீர்மானிக்க

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:10 +0530

முடியாது. மேலும் அசா.ஆ.10 படி எதிரி மீது வழக்கு தொடர முறையாக அனுமதி பெற்றுள்ளது வெளிப்படுகிறது.

13) அசா.1 தனது குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது தான் ESI கழகத்தின் மேலாளராக இல்லை என்றும், இந்த வழக்கை ESI திருநெல்வேலி இயக்குனர் தான் தாக்கல் செய்துள்ளதாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். இந்த வழக்கின் சாட்சி பட்டியலில் ESI கோவில்பட்டி கிளை மேலாளர் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி மேலாளர் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதால், அப்போதைய மேலாளர் பணி மாறுதல் ஆகி சென்றுள்ளார் என்பதாலும், தற்போதைய மேலாளர் ஆவணங்கள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறார் என்பதாலும், தற்போதைய ESI கோவில்பட்டி கிளை மேலாளர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் 01.09.2012 முதல் எதிரி ESI பங்களிப்புத் தொகைகளை செலுத்தவில்லை என்று அரசு தரப்பு வழக்கு உள்ள நிலையில் இந்த வழக்கு 31.12.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிரி தொடர்ந்து ESI பங்களிப்பு தொகையை செலுத்தாமல் இருந்து வருவதால் இவ்வழக்கு குற்ற சம்பவம் தொடர்ந்து நடைபெற்று வருவதால் இவ்வழக்கு காலதாமதத்தால் பாதிக்கப்படவில்லை.

14) கோவில்பட்டி ESI அலுவலகத்தில் இருந்து இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்பதால் அசா.1 க்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க தகுதி கிடையாது என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், சாட்சி பட்டியலில் கோவில்பட்டி ESI கிளை மேலாளர் என்று சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளதால் எதிரியின் எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை. அசா.1, எதிரியின் நிறுவனத்தை பார்வையிடாவிட்டாலும் ஆவணங்கள் அடிப்படையில் அசா.1 சாட்சியமளித்துள்ளதால் அசா.1 ன் சாட்சியம் தகுதியானதாக கருதப்படுகிறது. மேலும் அசா.1 தனது குறுக்கு விசாரணையில் எதிரி மேற்படி சாந்தி கார்மெண்ட்ஸின் உரிமையாளர் என்று புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சாட்சியமளித்துள்ள நிலையில், அசா.ஆ.3 விசிட் நோட்டில் எதிரி மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்று முத்திரை இட்டு கையொப்பம் செய்துள்ளார். மேலும் அசா.1 தனது குறுக்கு விசாரணையில் 25.04.2013

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:16 +0530

அன்று எதிரிக்கு ESI எண் வழங்கப்பட்டதாக சாட்சியமளித்துள்ளதன் மூலம் எதிரி தான் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்பது வெளிப்படுகிறது. இந்த வழக்கில் மேற்படி சாந்தி கார்மெண்ட்ஸில் வேலை பார்த்த பணியாளர்கள் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. மேலும் மேற்படி நிறுவனத்தில் பணியாற்றிய பணியாளர்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று அசா.1 தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளது இவ்வழக்கை பாதிக்கவில்லை. புகார்தாரரின் குறைபாடுகளுடைய செயல்களை வைத்து மட்டும் எதிரி குற்றம் செய்யவில்லை என்று தீர்மானிக்க முடியாது.

15) அசா.ஆ.6 ல் எத்தனை மாதத்திற்கு, எவ்வளவு தொகை எதிரி செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அந்த ஆவணம் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அசா.ஆ.6 ஒப்புதல் அட்டையில் 07.11.2013 அன்று மேற்படி அசா.ஆ.6 எதிரிக்கு சார்வு செய்யப்பட்டதாக உள்ள நிலையில், இந்த வழக்கு நீதிமன்றத்தில் 31.12.2015 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், எதிரியின் எதிர்வாதம் ஏற்புடையதாக இல்லை. மேலும் அசா.1 தனது குறுக்கு விசாரணையில் அசா.ஆ.4 ல் பணியாளர் எண் கொடுக்கப்படவில்லை என்றும், அசா.ஆ.4 ல் எதிரி தான் மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். அசா.ஆ.4 உண்மையான ஆவணம் இல்லை என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், அரசு தரப்பில் அசல் அசா.ஆ.4 தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், அசா.ஆ.4 யை புகார்தாரர் தரப்பில் மோசடியாக உருவாக்குவதற்கான சிறப்பு காரணங்கள் இருப்பதாக எதிரி தரப்பில் நிறுவப்படவில்லை என்பதாலும், எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை.

16) அசா.ஆ.5 முதல் அசா.ஆ.9 வரையான ஆவணங்களில் வேறு நபர்கள் கையொப்பம் செய்துள்ளதால் அதை எதிரிக்கு அனுப்பப்படவில்லை என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், மேற்படி ஆவணங்களின் ஒப்புதல் அட்டைகளில் உள்ள முகவரியை எதிரி தரப்பில் தனது முகவரி இல்லை என்று மறுக்கப்படாத நிலையில்,

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:23 +0530

மேற்படி ஆவணங்களின் ஒப்புதல் அட்டையில் எதிரியின் வீட்டைச் சார்ந்தவர்கள் கையொப்பம் செய்திருக்கலாம் என்ற நிலையில், எதிரியின் எதிர்வாதங்கள் ஏற்புடையதாக இல்லை. மேலும் மேற்படி சாந்தி கார்மெண்ட்ஸ் நிறுவனத்தை இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்க்கப்படவில்லை என்பதால் இந்த வழக்கு குறைபாடு உடையது என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், இது குற்றவியல் வழக்கு என்பதாலும், எதிரி மட்டுமே மேற்படி நிறுவனத்திற்கு ஒரே உரிமையாளர் என்பதாலும், மேற்படி நிறுவனத்தை இந்த வழக்கில் ஒரு எதிரியாக சேர்க்கவில்லை என்பது இவ்வழக்கை பாதிக்கவில்லை.

17) மேற்படி சாந்தி கார்மெண்ட்ஸ் என்ற பெயரில் எந்த நிறுவனமும் கிடையாது என்றும், மேற்படி நிறுவனத்திற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்றும், மேற்படி நிறுவனத்தில் எந்த தொழிலாளர்களும் இல்லை என்றும், எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில் எதிரி மீது பொய்யாக புகார்தாரர் புகார் செய்ய சிறப்பு காரணங்கள் உள்ளதாக எதுவும் எதிரி தரப்பில் நிறுவப்படவில்லை என்பதால், எதிரியின் எதிர்வாதங்கள் ஏற்புடையதாக இல்லை. மேலும் எதிரி தனியாக டெய்லர் கடை வைத்து வேறு பணியாளர்கள் இல்லாமல் அவர் மட்டும் தான் வேலை செய்வதாகவும், இந்த வழக்கு புள்ளி விவரத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்கு என்றும், தெரியாத நபர்களின் முகவரியை எதிரியிடம் வாங்கி, எதிரியின் கடையில் அவர்கள் வேலை பார்த்ததாக பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், எதிரி தனியாக டெய்லர் கடை வைத்து நடத்தி வருவதாக எந்த ஆவணமும், சாட்சியமும் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் எதிரியின் எதிர்வாதங்கள் நம்பும்படியாக இல்லை. எதிரி உண்மையில் டெய்லர் கடை தனியாக வைத்து நடத்தி வந்திருந்தால் அது தொடர்பாக ஏதாவது சாட்சியத்தையும், ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்.

18) அசா.1 தனது குறுக்கு விசாரணையில் பெரிய அளவில் முரண்பாடுகள் இன்றி சாட்சியம் அளித்துள்ளதாலும் அசா.1 புகார் மனுவை ஒத்து பெரிய அளவில் முரண்பாடுகள் இன்றி சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் போதுமான

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:29 +0530

ஆவணங்கள் மற்றும் சாட்சி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், எதிரியின் தரப்பில் எடுக்கப்பட்டுள்ள எதிர்வாதங்கள் முரண்பாடாக உள்ளதாலும், எதிரியின் எதிர் வாதங்களை நிரூபிக்க போதுமான சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும் அரசு தரப்பு வழக்கு மீது நம்பிக்கை ஏற்படுகிறது.

19) அசா.ஆ.3 விசிட் நோட்டை பார்வையிடும் போது எதிரி மேற்படி M/s. M.r. சாந்தி கார்மெண்ட்ஸ்சின் உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அசா.1 ன் சாட்சியத்தை பார்வையிடும் போது எதிரியின் நிறுவனத்தில் ஆய்வு செய்யப்பட்டு, பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய பணியாளர்கள் மற்றும் உரிமையாளர் ESI பங்களிப்பு தொகையை முறையாக செலுத்தவில்லை என்பது தெரிய வந்துள்ளது வெளிப்படுகிறது. மேற்படி அசா.ஆ.6 படிவம் C 18 Adhoc அறிவிப்பை பார்வையிடும் போது 10 தொழிலாளர்களுக்கான 13 மாதங்களுக்கு உண்டான ரூ.69,712/- ESI தொகையை எதிரி செலுத்தவில்லை என்பது வெளிப்படுகிறது. மேலும், எதிரிக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டும், எதிரி தொடர்ந்து ESI அலுவலகத்தில் ஆஜராகமலும், ESI தொகையை செலுத்தாமலும் இருந்தது தெரிய வருகிறது. மேற்படி அறிவிப்புகளுக்கு எதிரி விளக்கம் அளிக்காமலும், பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்பதாலும், எதிரி மேற்படி அறிவிப்பில் கண்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டதாகவே தீர்மானிக்கப்படுகிறது. எதிரி உண்மையில் முறையாக ESI பங்களிப்பு தொகையை ESIC நிறுவனத்திற்கு செலுத்தியிருந்தால், எதிரி முறையாக மேற்படி அறிவிப்புகளுக்கு பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பார்.

20) மேலும் புகார் மனுவில் சாந்தி கார்மெண்ட்ஸ்சில் ஆய்வு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அசா.ஆ.3 விசிட் நோட்டில் M/R. சாந்தி கார்மெண்ட்ஸ் என்று குறிப்பிடப்பட்டும், உரிமையாளர் என்ற நிலையில் எதிரியின் கையொப்பமும் உள்ளது. அசா.ஆ.10 ன் படி 03.08.2015 அன்று வழக்கு தொடர அனுமதி கொடுக்கப்பட்டு 31.12.2015 அன்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், அசா.1 ன் வாய்மொழி சாட்சியத்தின் அடிப்படையில் எதிரி

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:34 +0530

மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்பது தெளிவாகிறது. மேலும், எதிரி மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் என்று விசிட் நோட்டில் எதிரி மேற்படி நிறுவனத்தின் முத்திரையுடன் கையொப்பம் செய்துள்ளார். அசா.ஆ.3 ல் உள்ள கையொப்பத்தை எதிரி தரப்பில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்பதால் புகார்தாரர், எதிரியின் நிறுவனத்திற்கு ஆய்வுக்கு சென்றது தெளிவாகிறது.

21) மேலும் தொழிலாளர்களின் மேற்படி ESI பங்களிப்பு தொகையை எதிரி செலுத்தவில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் அசா.1 ன் வாய்மொழி சாட்சியமும், அரசு தரப்பு சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசா.1 யை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது, எதிரி தரப்பில் பெரிய அளவில் எந்தவித முரண்பாடுகளும் கொண்டு வரப்படவில்லை. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களை அனுசரித்து அசா.1 சாட்சியமளித்துள்ளார். மேற்படி ESI பங்களிப்பு தொகை செலுத்தாதது தொடர்பாக எதிரி விளக்கம் அளிப்பதற்கும், மேற்படி தொகையை செலுத்துவதற்கும் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டும், உரிய சட்ட விதிமுறைகள் படி எதிரி எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிரி உரிய முறைப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் மேற்படி குற்றச்சாட்டுகளை அவர் ஏற்றுக் கொண்டதாகவே தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எதிரி மேற்படி அவரது நிறுவனத்தில் வேலை செய்த தொழிலாளர்களின் செப்டம்பர் 2012 முதல் செப்டம்பர் 2013 வரையிலான ESI பங்களிப்பு தொகையை செலுத்தவில்லை என்பது தெளிவாகிறது.

22) மேலும், புகார்தாரர் முறையாக எதிரியின் தொழிற் நிறுவனத்தை ஆய்வு செய்து, எதிரிக்கு அறிவிப்புகள் அனுப்பியும், விளக்கம் அளிக்க வாய்ப்பளித்தும், எதிரி ESI தொகையை செலுத்தாததால் புகார்தாரர் உரிய அனுமதி பெற்று எதிரி மீது இந்த தனிப்புகாரை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரி, தொழிலாளர்களின் தொழிலாளர்கள் மற்றும் எதிரியின் ESI பங்களிப்பு தொகையை விதிமுறை 31 ன் படி குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவில்லை என்பதால் எதிரி மீது சுமத்தப்பட்ட ESI Act பிரிவு 85(i)(a) r/w 85(a) கீழான குற்றச்சாட்டுகளானது புகார்தாரர் தரப்பில்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:39 +0530

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரி மீது ESI சட்டப் பிரிவு 85(i) (a) r/w 85(a) கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், அரசு தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களின் படி எதிரி மீதான ESI சட்டப் பிரிவு 85(i)(b) r/w 85(a) கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23) எதிரி மீது ESI பங்களிப்பு தொகையை செலுத்தாத குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாலும், எதிரியின் குற்றசெயல்களால் தொழிலாளர்களுக்கு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாலும், எதிரி சட்டவிரோதமாக ஆதாயம் அடைந்துள்ளதாலும், எதிரியை probation of offenders Act ன் கீழ் இந்நீதிமன்றம் விடுவிக்கவில்லை.

24) முடிவில் எதிரி மீது ESI Act பிரிவுகள் 85(i)(a) r/w 85(a) படியான குற்றச்சாட்டின் படி குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு வழங்கவிருக்கும் தண்டனை குறித்து கேட்ட போது

"குறைந்த தண்டனை போதும்" என்று கூறினார்.

25) எதிரியின் பதிலையும், எதிரியின் குடும்ப சூழ்நிலை மற்றும் எதிர்கால வாழ்க்கையை கருத்தில் கொண்டும், எதிரி மீது ESI Act பிரிவு 85(i)(a) r/w 85(a) ன் படியான குற்றச்சாட்டுக்கு ஒரு வருடம் (1) கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், ரூபாய் பத்தாயிரம் மட்டும் (Rs.10,000/–) அபராதமும், எதிரி அபராதம் கட்டத் தவறினால் கூடுதலாக ஒரு மாதம் (1) கடுங்காவல் தண்டணை விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும், எதிரியின் குற்றசெயலால் ESIC மற்றும் தொழிலாளர்களுக்கு பண இழப்பு ஏற்பட்டுள்ளதால் எதிரி மொத்தமாக ரூ.69,712/–த்தை (Rs. Sixty nine thousand seven hundred and twelve only) ESI தொகையை எதிரி முதலில் திருப்பி செலுத்தாமல் இருந்த தேதியான 01.09.2012 முதல் ESI கழகத்திற்கு பணத்தை திருப்பிக் கொடுக்கும் தேதி வரை 09% சதவிகித ஆண்டு வட்டியுடன் கணக்கிட்டு எதிரி, ESIC க்கு கொடுக்க வேண்டும் என்று ESI சட்டம் பிரிவு 85C(2)ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும், எதிரி மேற்படி ESI சட்டம் பிரிவு 85C(2)ன் கீழ் விதிக்கப்பட்ட

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.08.13 22:43:46 +0530

தொகையை 60 (அறுபது) நாட்களில் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். எதிரி, அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் ESI Act பிரிவு 85(i)(a) r/w 85(a) r/w 85(C)(2)ன் கீழ் கூடுதலாக ஒரு வருடம் (1) கடுங்காவல் சிறை தண்டனையும், மேற்படி 60 (அறுபது) நாட்கள் கழிந்த பிறகு ஒவ்வொரு நாட்களுக்கும் ரூ.100/-(ரூபாய் நூறு மட்டும்) அபராதமும், மேற்படி தொகையை திருப்பி செலுத்தும் வரை எதிரி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. எதிரி அபராதம் மற்றும் ESI சட்டப் பிரிவு 85C(2)ன் கீழான தொகையை கட்ட தவறினால், எதிரி ESI Act பிரிவு 85(i)(a) r/w 85(a)ன் விதிக்கப்படும் தண்டனையை அனுபவித்த பிறகு எதிரி அபராதம் கட்டத் தவறினால் விதிக்கப்படும் தண்டனையையும், ESI சட்டப் பிரிவு 85C(2)ன் கீழான தண்டனையையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேற்படி தொகையை எதிரி இந்நீதிமன்றத்தில் செலுத்திய பிறகு ESIC மேற்படி தொகையை பெற இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொள்ளவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இந்த வழக்கில் எதிரி நீதிமன்ற காவலில் இல்லை என்பதால் குவிமுச பிரிவு 428 ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

26) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் இல்லாததால் அது குறித்த உத்தரவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.08.13 22:43:52 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:

மனுதாரர் தரப்பு சாட்சிகள் எண்	சாட்சிகளின் பெயர்	விளக்கம்
1.	திரு. கோமதி செல்வ சீனிவாசன்	புகார்தாரர் சாட்சி

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.08.13 22:43:58 +0530

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/ சான்றளித்தவர்	ஆவணத்தின் நிலை
1.	ESIC தீர்மானம் – 26.07.1991	அ.சா.1 – 16.07.2026	சான்றிட்ட நகல்
2	படிவம் சி 10 – 08.01.2013	அ.சா.1 – 16.07.2026	அசல்
3	விசிட் நோட் – 08.01.2013	அ.சா.1 – 16.07.2026	அசல்
4	படிவம் 1	அ.சா.1 – 16.07.2026	அசல்
5	M/s. M.R. சாந்தி கார்மெண்ட்ஸ்க்கு அனுப்பப்பட்ட படிவம் சி 11 அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை – 25.04.2013	அ.சா.1 – 16.07.2026	அசல்
6	M/s. M.R. சாந்தி கார்மெண்ட்ஸ்க்கு அனுப்பப்பட்ட படிவம் சி 18 Adhoc அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை – 23.10.2013	அ.சா.1 – 16.07.2026	அசல்
7	M/s. M.R. சாந்தி கார்மெண்ட்ஸ்க்கு அனுப்பப்பட்ட show cause அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை – 23.10.2013	அ.சா.1 – 16.07.2026	அசல்
8	M/s. M.R. சாந்தி கார்மெண்ட்ஸ்க்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டை – 30.09.2014	அ.சா.1 – 16.07.2026	அசல்
9	ESI சட்டம் பிரிவு 45-A கீழான உத்தரவு – 14.07.2015	அ.சா.1 – 16.07.2026	அசல்
10	ESI சட்டம் பிரிவு 85(a) கீழான வழக்கு தாக்கல் செய்வதற்கான அனுமதி உத்தரவு – 03.08.2015	அ.சா.1 – 16.07.2026	அசல்

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.08.13 22:44:03 +0530

புகார்தாரர் தரப்பு சான்றுப்பொருட்கள்: இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்– இல்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.08.13 22:44:07 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
கோவில்பட்டி